**தலைப்பு 326 – சமுதாய அடிப்படை சீர்திருத்த திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சமுதாய அடிப்படை சீர்திருத்த திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் சமுதாய அடிப்படை சீர்திருத்த திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 29 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூலை 16 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சமுதாய அடிப்படை சீர்திருத்த திணைக்களத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணகீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சமுதாய அடிப்படை சீர்திருத்த திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் சமுதாய அடிப்படை சீர்திருத்தத் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றது.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2015 மார்ச் 18 இல் பொதுத் திறைசேரியால் நிதிக் குத்தகை முறையின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 2,184,268 பெறுமதியான மோட்டார் வாகனம் ஒன்றின் குத்தகைக் காலப்பகுதி முடிவடைந்திருந்த போதிலும் அதன் உரிமைத்துவத்தை நிறுவனத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களின் உரிமைத்துவத்தை மாற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கொவிட் - 19 பரவல் காரணமாக குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியின் போது குத்தகையை பூர்த்தி செய்வதற்கும் வாகனத்தின் உரிமைத்துவத்தினை மாற்றுவதற்கும் சாத்தியமற்றிருந்தது. |

### 1.6.2 வைப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2 ஆண்டுகளை விஞ்சியிருந்த இரண்டு வைப்புக் கணக்குகளிற்குரிய ரூபா 88,250 தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 570 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 6000-0-012-0-145. இணங்கப்பட்டுள்ளது. இவ் வைப்புக் கணக்கில் காணப்பட்ட ரூபா 250 தொகையை 2020.06.30 இற்கு முன்னர் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>6000-0-0-19-0-29. சமுதாய அடிப்படை சீர்திருத்தங்கள் தொடர்பான வழிகாட்டல் கையேடு ஒன்றை வடிவமைப்பதற்காக ரூபா 88,000 தொகை வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இது ஏற்கனவே தயாரிக்கப்பட்டு இறுதியாக்கப்பட்டுள்ளதுடன் கையேட்டை அச்சிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

### 1.6.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே குறிப்பிடப்படுகின்றன.

| அவதானிப்புக்கள் | | | |
| --- | --- | --- | --- |
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| (i) நிதிப்பிரமாணம் 214 | பொறுப்புக்கள் பதிவேடுகள் ஒழுங்காக பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 1,771,420 தொகையான பிரயாணச் செலவினங்கள் 2020 யூன் 17 வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிரயாணச் செலவினங்களுக்கான பொறுப்புக்கள் தற்போது தீர்ப்பனவு செய்யப்பட்டு வருகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 447(7) | செலவின விடயம் 1201 இற்குரிய ஒதுக்கீட்டுப் (வாக்குப்பணம்) பதிவேட்டுத் தாள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சீர்செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| (iii) | நிதிப்பிரமாணம் 565(2) மற்றும் (4) | வைப்புக்களுக்கான மீள்கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது கொடுப்பனவுத் திகதி பெறுவனவுகள் நிரலில் குறிப்பிடப்பட்டிருக்காததுடன் வைப்புத் திகதி கொடுப்பனவுகள் நிரலில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அனுமதிக்கும் உத்தியோகத்தர் மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக முதலொப்பம் இட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சீர்செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

(ஆ) அரச கணக்குகள் சுற்றறிக்கைகள்

| | | | |
|---|---|---|---|
| 2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 7(ii) ஆம் பந்தி | வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்காக சேகரிக்கப்பட்ட ரூபா 10,595,473 தொகை ஏசீஏ-3 படிவத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். | தொடர்ந்துவரும் ஆண்டில் இதனைச் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 06 மீண்டெழும் செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 25,700,000 நிதியேற்பாடுகளில் | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் நியாயமான செலவின மதிப்பீடுகள் | பிராந்திய அலுவலகங்களை பரீட்சிப்பதற்காக சமூகமளித்தல் மற்றும் செயன்முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களுக்காக |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 8,525,000 தொகையான நிதியேற்பாடுகள் ஏனைய செலவின விடயங்களிற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் அவ்வாறு மாற்றப்பட்ட நிதியேற்பாடுகள் உள்ளடங்கலாக ரூபா 12,825,278 தொகையான நிதி ஏற்பாடுகள் அல்லது 50 சதவீதம் இலக்கிடப்பட்ட செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்டிருக்கவில்லை. | தயாரிக்கப்பட வேண்டும். | பங்குபற்றுதல் என்பன இழிவாக்கப்பட்டிருந்ததுடன் அதிக நிகழ்ச்சித்திட்டங்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்தமை மற்றும் ஏப்ரல் மாதத்தில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக மொழிக் கொள்கையை அமுல்படுத்துவது தொடர்பாக உத்தியோகத்தர்களால் ஆகக்குறைந்தளவு வேண்டுதல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை காரணமாக நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. |
| (ஆ) | 02 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 3,272,000 தொகையான குறைநிரப்பு ஏற்பாடுகள் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தன. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் நியாயமான செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | இந்நிதியேற்பாடுகள் போதியளவு கட்டுநிதிகள் பெறப்பட்டிருக்காததால் சேமிக்கப்பட்டிருந்தன. |
| (இ) | 04 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக நிதிப்பிரமாணம் 66/69 இன் கீழ் மாற்றப்பட்ட ரூபா 6,144,000 நிதியேற்பாடுகளில் ரூபா 2,617,758 தொகையான நிதியேற்பாடுகள் பயன்படுத்தப்படாமல் அவை சேமிக்கப்பட்டிருந்ததுடன் அச் சேமிப்புக்களின் சதவீதமானது 31 சதவீதம் தொடக்கம் 82 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டன. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் நியாயமான செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | செலுத்தப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்ட பிரயாணச் செலவினங்களை செலுத்துவதற்கான கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் 2019.12.31 வரையிலும் பெறப்பட்டிருக்காததாலும் போதியளவு கட்டுநிதி பெறப்பட்டிருக்காததாலும் நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. |
| (ஈ) | 04 மூலதன செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 8,450,000 நிதியேற்பாடுகளில் ரூபா 2,000,000 தொகையான நிதிதுயேற்பாடுகள் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்ததுடன் அவ்வாறு மாற்றப்பட்டிருந்த நிதியேற்பாடுகள் உள்ளடங்கலாக ரூபா 5,618,179 தொகையான அல்லது 66 சதவீத நிதியேற்பாடுகள் | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் நியாயமான செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | (i) 05/2019 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் 10 சதவீத நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டதன் காரணமாகவும் முறையான பராமரிப்பு மற்றும் கட்டுப்பாடு ஒன்றுடன் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டதன் காரணமாகவும் நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. |

| | | | |
|---|---|---|---|
| | இலக்கிடப்பட்ட செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்டிருக்கவில்லை. | | (ii) மதிப்பீடுகளை தயாரிப்பதில் உள்ள தவறு காரணமாக ஏற்பட்ட குறைபாடுகள், நிதிப்பிரமாணம் 66 இன் மூலம் செலவின விடயம் 2102 இன் கீழ் நிதியேற்பாடுகளை மாற்றுதல் மற்றும் கட்டுநிதி பெறப்பட்டிருக்காதமை காரணமாக நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. |
| (உ) | 326-1-1-2001 செலவின விடயத்திற்காக நிதிப்பிரமாணம் 66/69 இன் கீழ் மாற்றப்பட்டிருந்த ரூபா 2,050,000 தொகையான நிதியேற்பாடுகளில் ரூபா 1,050,624 தொகையான அல்லது 50 சதவீதத்திற்கு அதிகமான நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் நியாயமான செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | உரிய செலவினம் 2019.12.31 வரையிலும் ஏற்பட்டிருக்காததால் இந்நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. |
| (ஊ) | 02 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ரூபா 106,000,000 தொகையான மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் உள்ளடங்கலாக ரூபா 86,480,878 கூட்டுமொத்தமான செலவினம் மாத்திரம் ஏற்பட்டிருந்ததுடன் அம் மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியேற்பாடுகளில் ரூபா 12,830,000 தொகையான நிதியேற்பாடுகள் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தன. 04 செலவின விடயங்களுக்கான ரூபா 12,750,000 மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடுகளை விஞ்சி கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் உள்ளடங்கலாக ரூபா 21,120,749 தொகையான செலவினம் ஏற்பட்டிருந்ததுடன் ரூபா 6,144,000 தொகையான நிதியேற்பாடுகள் | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் நியாயமான செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடுகளை விஞ்சி பாதீட்டிலிருந்து நிதியேற்பாடுகள் பெறப்பட்டிருந்ததால் இச் செலவின விடயத்தின் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன் 001-2-6-6-2507 செலவின விடயத்தின் கீழ் சனாதிபதி செயலகத்திலிருந்து நிதியேற்பாடுகள் பெறப்பட்டிருந்ததுடன் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் காரணமாக அதிக நிகழ்ச்சித்திட்டங்கள் இரத்துச்செய்யப்பட்டிருந்தன. |

நிதிப்பிரமாணம் 66/69 இன் கீழ் ஏனைய செலவின விடயங்களிலிருந்து அச் செலவின விடயங்களுக்காக மாற்றப்பட்டிருந்தன. அதற்கிணங்க 06 செலவின விடயங்களின் மதிப்பீடுகள் யதார்த்தமான அடிப்படையொன்றில் தயாரிக்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது.

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட ரூபா 6,280,070 தொகையான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 5,220,124 ஆகக் காணப்பட்டதுடன் இதன் மூலம் ரூபா 1,060,846 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கான கொடுப்பனவுகள் 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | செலவினம் முறையாக முகாமை செய்யப்பட வேண்டும். | கட்டுநிதி பெறப்பட்டிருக்காததன் காரணமாக செலுத்தப்பட முடியாதிருந்த இச் செலவினங்கள் மிகவும் அத்தியாவசியமான செலவினங்களாக இருந்ததால் 2020 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (ஆ) | வருடாந்தம் ஏற்படுகின்ற சேவைகள் அல்லது வழங்கல்களாக காணப்படாத மேலதிக நேரம் மற்றும் விடுமுறை நாள் கொடுப்பனவு மற்றும் உள்ளூர் பிரயாண செலவினங்களின் கூட்டுமொத்தம் ரூபா 1,930,469 தொகை 2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 94(2) மற்றும் (3) ஆம் பிரிவுகளின் பிரகாரம் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தன. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும். | மேலதிக நேரம் மற்றும் விடுமுறை நாள் கொடுப்பனவு என்பவற்றிற்கு போதியளவு நிதியேற்பாடுகள் காணப்பட்டதுடன் உள்ளூர் பிரயாண செலவினங்கள் தொடர்பாக சரியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்வரும் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2.3 முற்பணக் கணக்கு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட பினனர் 8 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் ஒழுக்காற்று விசாரணைகள் வினைத்திறனாகவும் விரைவாகவும் மேற்கொள்ளப்பட்டிருக்காததாலும் முன்னைய ஆண்டில் ஓய்வுபெற்ற உத்தியோகத்தரொருவரின் ஓய்வூதிய பணிக்கொடை வழங்கப்பட்டிருக்காததாலும் 2019 திசெம்பர் 31 அளவில் அறவிடப்பட வேண்டிய ரூபா 174,880 தொகையான கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒழுக்காற்று விசாரணைகள் விரைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்ததுடன் கடன்கள் அறவிடப்பட வேண்டும். | ஒழுக்காற்று நடவடிக்கைகளை பூர்த்தி செய்த பின்னர் உடனடியாக கடன்கள் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிறைவேற்று மட்டத்தில் 13 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டதன் காரணமாக 633 உத்தியோகத்தர்களின் நிர்வாகச் செயற்பாடுகள் முறையாக மேற்கொள்ளப்படுவதற்கு சாத்தியமற்றிருந்தததுடன் சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர்கள் மற்றும் வேலை மேற்பார்வையாளர்களின் 31 பதவிகள் வெற்றிடமாக இருந்ததால் பிராந்திய அலுவலகங்கள் முறையாக தொழிற்பட்டிருக்கவில்லை. மேலும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் 39 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டதால் சீர்திருத்த கட்டளைகளை பெற்றிருந்த நபர்களின் பின்தொடர் நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதனால் திணைக்களத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதில் தடைகள் காணப்பட்டிருந்தன. | உரிய நிறுவனங்களின் ஒருங்கிணைப்புடன் சிரேஷ்ட முகாமைத்துவத்தால் முக்கிய பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கு சில சந்தர்ப்பங்களில் உரிய நிறுவனங்களிடமிருந்து வேண்டுகோள்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |